*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 6 No. 02, August 2026**, **p207-215** | Available online at: www.ngmtamil.in
*Original Research Paper*

# 'தமிழகத் தொல்லியல் வரலாற்றில் மட்கலன்களின் முதன்மையும் குயவர்களின் பங்களிப்பும்'

## The Primacy of Earthenware and the Contribution of Potters in the Archaeological History of Tamil Nadu

**முனைவர் கு. அந்தோணி ராஜா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 02..

**Dr. K. Anthony Raja*,**
*Assistant Professor of Tamil, St. Joseph's College,*
*Tiruchirappalli – 02*
*Email: anthonyraja_ta1@mail.sjctni.edu*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 04-08-2026
**Published: 05-08-2026**

*Corresponding Author Email:
*anthonyraja_ta1@mail.sjctni.edu*

**Abstract:** Ancient Tamils have left behind their cultural elements as remains in the very places where they lived. Furthermore, the literature, inscriptions, sculptures, paintings, architecture, and monuments of the ancient Tamils greatly help in understanding their history. The hand-crafting techniques of the ancient Tamils are revealed through the earthenware, copper plates, tools, and ornaments made by them and recovered from excavations. Buried and hidden structures speak volumes about the creativity of that era. Additionally, terracotta figurines and burial monuments serve as vital evidence for uncovering ancient history. Thus, among all archaeological evidences that reflect the lifestyle and intellect of the ancient Tamils, pottery and earthenware are the most essential. These earthenware objects highlight the diverse customs and supreme intelligence of the ancient Tamils. The primary objective of this research article is to showcase the artistic skill and cognitive brilliance of ancient potters through these artifacts.

**Keywords:** *Pottery, Potter, Lifestyle, Remnants, Archaeology, Burial Urn, vessel, Megalithic monument, Roman Pottery, casket, Pitcher.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.21**

**ஆய்வுச் சுருக்கம்**

தொல்பழங்காலத் தமிழர்கள் தங்களின் பண்பாட்டுக் கூறுகளை எச்சங்களாகத் தாங்கள் வாழ்ந்த இடங்களிலேயே விட்டுச்சென்றுள்ளனர். மேலும் பண்டைத் தமிழரின் இலக்கியங்கள் கல்வெட்டுகள் சிற்பங்கள் ஓவியங்கள் கட்டடங்கள் நினைவுச் சின்னங்கள் போன்றவை அவர்களின் வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் உதவுகின்றன. பழந்தமிழர்களின் கைத்தொழில் நுட்பத்தை அகழாய்வில் கிடைத்துள்ள அவர்களால் செய்யப்பட்ட மட்பாண்டங்களும் செப்பேடுகளும் கருவிகளும் அணிகலன்களும் வெளிப்படுத்துகின்றன. மண்ணில் புதைந்து மறைந்த கட்டடங்கள் அக்காலப் படைப்பாற்றலை எடுத்துரைக்கின்றன. மேலும் சுடுமண் பொம்மைகளும் ஈமச்சின்னங்களும் தொன்மையான வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாக விளங்குகின்றன. இவ்வாறாகப் பண்டைத் தமிழரின் வாழ்வியலையும் அவர்களின் அறிவாற்றலையும் வெளிப்படுத்துகின்ற தொல்லியல் சான்றுகளில் மட்கலன்களே மிகவும் இன்றியமையாதவை. தொன்மைத் தமிழர்களின் பல்வேறு பழக்கவழக்கங்களையும் உயர்வான அறிவாற்றலையும் இம்மட்கலன்கள் வெளிக்காட்டுகின்றன. இவைகளின் மூலமாகப் பழங்காலக் குயவர்களின் கலைத்திறனையும் அவர்களின் அறிவாற்றலையும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:**

மட்பாண்டம், வேட்கோ-குயவர், தாழி, வாழ்வியல், தொல்லியல், கலம், எச்சங்கள், ஈமச்சின்னம், ரௌலட்டட்- உரோமாபுரி மட்பாண்டம், பேழை, குழிசி - குடம்

**முன்னுரை**

ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றுப் புகழினையும், பண்பாட்டின் மேன்மையினையும், நாகரிக வளர்ச்சியினையும் ஆய்வுகளின் மூலமாக வெளிக்கொணர்வதே தொல்லியல் ஆகும். மனிதன் மண்ணில் தோன்றிய காலம் முதல் கடைசி உயிரினம் இப்புவியில் வாழ்கின்றவரை உள்ள நிகழ்வுகளைத் தொல்லியல் விளக்குகின்றது. மேலும் பழமையான வரலாற்றினை அறிந்து கொள்ளச் செய்கின்ற சான்றுகளில் முதன்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் விளங்குவது தொல்லியல் சான்றுகளே ஆகும். தொல்பொருளியல், மனிதன் பூமியில் தோன்றிய காலத்திலிருந்து இன்றைய காலகட்டம் வரை அடைந்திருக்கின்ற முன்னேற்றத்தையும் படிப்படியான வளர்ச்சி நிலைகளையும் சான்றுகளின் மூலம் அறிவியல் முறையில் அறியச் செய்கின்றது. பழங்காலத் தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டுக் கூறுகளை எல்லாம் எச்சங்களாக விட்டுச் சென்றுள்ளனர். இந்த வாழ்வியல் எச்சங்களை அவர்கள் வாழ்ந்து முடித்துச் சென்ற பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, தொல்லியல் தடயங்கள் அகழாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் தொல்லியல் தடயங்கள் மூலமாகத் தொல்பழங்காலத் தமிழருடைய பண்பாட்டுக் கலாச்சார மற்றும் வாழ்வியல் முறைகளின் அனைத்துக் கூறுகளையும் மீட்டுருவாக்கம் செய்து கொள்ள முடிகின்றது. இத்தகையத்

தொல்லியல் அடையாளங்களில் தமிழரின் தொல்பழங்கால வரலாற்றை அறிந்து கொள்வதற்கும் மீட்டுருவாக்கம் செய்வதற்கும் முக்கியமான தொல்பொருளாகக் கிடைப்பவை அக்காலக் குயவர்கள் வனைந்த மட்பாண்டங்களே ஆகும்.

**குயவரின் மட்பாண்டத் தொழில்**

புதிய கற்காலத்தில் மனிதன் உணவுக்காக அலையும் நிலையிலிருந்து வேளாண்மை செய்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையை அடைந்தபோது மனிதன் கண்டுபிடித்த மிகவும் பழமையான தொழில்களில் ஒன்றான மட்பாண்டம் வனைதல் தோன்றியது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை எதிர்காலத் தேவைக்காக சேமித்து வைக்கும் நிலை ஏற்பட்டதன் விளைவாகவே மனிதன் மட்பாண்டங்களைக் கண்டுபிடித்தான். இந்த மட்பாண்டங்கள் முதலில் கைகளால் தட்டப்பட்டு மட்டுமே செய்யப்பட்டு வந்ததுடன், பின்நாட்களில் சக்கரங்களைக் கொண்டு செய்யும் நிலைக்கு வளர்ச்சி அடைந்தது. வேளாண் வளர்ச்சியால் தேவைக்கும் அதிகமான பொருட்களைப் பாதுகாக்கும் எண்ணம் எழுந்து, ஆரம்பத்தில் கைகளால் தட்டப்பட்டுச் செய்யப்பட்ட இந்த மட்பாண்டங்கள், குயவனின் சக்கரத்தின் கண்டுபிடிப்பிற்குப் பிறகு நேர்த்தியான வடிவங்களைப் பெற்றதுடன் தொல்லியல் ஆய்வுகளில் நாகரிகத்தின் தொன்மையை அறியும் முக்கிய சான்றாக இன்றளவும் திகழ்கிறது.

மண்ணை அடிப்படையாகக் கொண்டு மட்பாண்டங்களை உருவாக்கும் குயவர்களைச் சங்க இலக்கியங்கள் மண்மகன், மண்ணீட்டாளர், கலம்செய் கோ, மண்வினை மாக்கள், வேட்கோ மற்றும் கடம்பர் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கின்றன. இதில் குடம் செய்பவர் 'கடம்பர்' என்றும், மண்ணைக் கையாளும் அரசன் என்னும் பொருளில் 'வேட்கோ' என்றும் சங்க நூல்கள் விளக்குகின்றன. புதிய கற்காலத்திலேயே மூலப்பொருட்களைத் துல்லியமாகத் தேர்ந்தெடுத்து மட்பாண்டங்கள் செய்யும் நுட்பங்களைக் கற்றுக்கொண்ட குயவர்கள், தங்களைச் சுற்றியுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாத்திரங்களைச் செய்து வழங்கினர். மேலும், கி.மு.1500 முதல் கி.பி.300 வரையிலான காலக்கட்டத்தில் மட்பாண்டத் தொழிலில் பல புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்திப் புரட்சியை ஏற்படுத்திய இவர்கள், புதிய கற்காலத்திற்கு முன்பே தொடங்கிய இத்தொழிலைப் பெருங்கற்காலத்தில் பன்மடங்கு வளர்த்தெடுத்துப் பல்வேறு கலைநயமிக்க வடிவங்களில் மட்பாண்டப் பொருட்களை உருவாக்கினர்.

**புதியகற்காலமும் குயவரும்**

புதிய கற்காலத்தில், பண்பாட்டு எச்சங்களாகத் திகழும் தொன்மை வாய்ந்த மட்பாண்டக் கலை உருவானது. தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட இப்படியான மட்பாண்டங்கள் சாம்பல் நிறத்துடனும் வழவழப்பான மேற்பரப்புடனும் விளங்குகின்றன. குறிப்பாகப் பையம்பள்ளி, தகடூர் ஆகிய தொல்பழங்கால வாழ்விடங்களில் கைகளால் தட்டி உருவாக்கப்பட்ட ஐந்து வகையான மட்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிய கற்காலக் குயவர்கள் மட்பாண்டங்களைச் செய்வதில்

பானைகளைத் தட்டிப் பருமனைச் சீராக்கும் முறை மற்றும் இரண்டு பகுதிகளை இணைத்து முழு மட்கலமாக மாற்றும் முறை ஆகிய இரண்டு நுட்பங்களைக் கையாண்டனர் (தாமோதரன். கு. தொல்லியல் நோக்கில் தமிழகம், பக்-147). மேலும், சலிக்கப்படாத மண்ணால் செய்யப்பட்ட சொரசொரப்பான பானைகளும், களிமண்ணுடன் பெருமணல் கலந்து முழுமையாகச் சுடப்படாத மட்கலன்களும் இக்காலத்தில் கிடைத்துள்ளன. இக்காலக் குயவர்கள் சிவப்பு, ஆரஞ்சு, சாம்பல் மற்றும் கருப்பு நிறங்களில் நான்கு வகையான மட்கலன்களைப் பல்வேறு வடிவங்களில் உருவாக்கினர். இவற்றைச் செய்யும் போது தடித்த ஓட்டுடன் சொரசொரப்பாகச் செய்தல், மேல்புறத்தைத் தேய்த்து மெருகூட்டுதல், பூச்சுப் பூசி மெருகேற்றுதல் ஆகிய மூன்று தொழில்நுட்பங்களைப் புதிய கற்காலக் குயவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

இரும்புக் காலத்தைச் சேர்ந்த பெருங்கற்காலப் பண்பாடு முழு வளர்ச்சி அடைந்திருந்த காலத்தில் மட்பாண்டத் தொழில் மிகச் சிறப்புற்று விளங்கியதால், அப்பொழுது மட்பாண்டம் செய்யும் குயவர்கள் சமூகத்தில் உன்னதமான நிலையில் மதிக்கப்பட்டனர். பெருங்கற்காலத்தில் தமிழகத்தின் மக்கள் தொகை சற்று பெருகிய காரணத்தினால், மக்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப பல்வேறு வடிவங்களிலான மட்பாண்டங்கள் பெருமளவில் தயாரிக்கப்பட்டன. இக்காலத்தில் பல வடிவங்களில் மட்பாண்டங்கள் உருவாக்கப்பட்ட போதிலும், குயவர்கள் கருப்பு-சிவப்பு வண்ண மட்பாண்டங்களையே அதிகமாகத் தயாரித்தனர். பசுமண்ணால் வளைந்த மட்பாண்டங்கள் அத்தகைய வண்ணத்தைப் பெறுவதற்கான தனிப்பட்ட தொழில்நுட்பத்தை அவர்கள் பயன்படுத்தியதன் மூலம், அக்கால மக்கள் அவற்றை விரும்பிப் பயன்படுத்தியதை அறிய முடிகிறது. பெருங்கற்காலத்தில் தயாரிக்கப்பட்ட பாத்திரங்களில், பளிச்சென்று நன்கு மெருகேற்றிய மேற்பரப்பைக் கொண்டவையே மிகவும் மதிப்புமிக்கவையாகத் திகழ்ந்தன. இதற்காக அவர்கள் சூளையில் சுடப்பட்டு நன்றாகச் சிவந்து நெருப்பாக இருக்கும் பானைகளின் மீது ஈரப்பசை உள்ள உப்புத்தூளைத் தூவும் தனித்துவமான தொழில்நுட்பத்தைக் கையாண்டனர் (இராமன். கே.வி, தொல்லியல் ஆய்வுகள், பக்-45). இதனால் வெப்பத்தால் உப்புத்தூள் மேற்பரப்பு முழுவதும் பரவி மட்பாண்டங்கள் மினுமினுப்பு அடைந்தன. இவ்வாறு, பெருங்கற்காலத்து மட்பாண்டங்கள் அனைத்தும் குயவர்களால் மிகவும் நேர்த்தியாகவும் கலைநயமிக்க வடிவங்களாகவும் உருவாக்கப்பட்டன.

**மட்பாண்டக்கலையின் வளர்ச்சி நிலை**

தொல்பழங்கால மக்களின் வாழ்வியலையும் பல்வேறு காலச் சூழல்களையும் அறிந்துகொள்ளக் குயவர்கள் உருவாக்கிய மட்பாண்டங்களே வரலாற்றின் முதன்மையான தொல்லியல் ஆதாரமாகத் திகழ்கின்றன. இவற்றுள் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் முதலிடம் வகிக்கின்றன. இவற்றின் மற்றொரு வடிவமான பழுப்பு மற்றும் காவி நிறம் பூசப்பட்ட பாண்டங்கள்

கி.பி. முதல் நூற்றாண்டு முதல் தயாரிக்கப்பட்டு, தமிழகத்தின் அனைத்து மாவட்ட அகழாய்வுகளிலும் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த குயவர்கள், மட்பாண்டத் தொழிலோடு சேர்த்துச் சுடப்படாத செங்கற்கள், சுடப்பட்ட கூரை ஓடுகள் மற்றும் சுடுமண் பொம்மைகள் போன்ற கிளைத் தொழில்களிலும் ஈடுபட்டனர். காவிரிப்பூம்பட்டினத்தில் கண்டெடுக்கப்பட்ட செங்கற்களும் கூரை ஓடுகளும் அவர்களின் செயல்திறனையும் கலை மேம்பாட்டையும் பறைசாற்றுகின்றன. பண்டைய தமிழர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டு வடிவிலான உட்குழிவான கூரை ஓடுகளைப் பயன்படுத்தாமல், ஆறு அங்குல நீளமும் இரண்டு அங்குல அகலமும் கொண்ட நீள்சதுரத் தட்டையான ஓடுகளையே தயாரித்தனர். கி.மு-வின் இறுதிக்காலத்தில் மரக்கட்டைகளின் மீது நெருக்கமாக அடுக்கி வேயப்படும் இத்தகைய கூரைகளே பெருமளவில் பயன்பாட்டில் இருந்தன.

வழிபாட்டுச் சின்னங்களாகவும் விளையாட்டுப் பொருள்களாகவும் பயன்பட்ட சுடுமண் உருவங்களும் பொம்மைகளும் தொடக்கத்தில் கைகளாலேயே உருவாக்கப்பட்டன. பின்னர் தேவையின் அதிகரிப்பால் அச்சுத் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டு, தெளிவான உருவங்கள் பெருமளவில் தயாரிக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஒரு பக்க உருவங்களாக இருந்த இவை, பின்னர் ஆடை அணிகலன்களுடன் கூடிய இருபக்க உருவங்களாக மேம்படுத்தப்பட்டன (மாணிக்கம். வீ, தமிழர் வாழ்வியல், பக்-62). உலகமே வியக்கும் வகையில் பிற்காலத்தில் உருவான கற்சிலைகளுக்கும் செப்புத்திருமேனித் தொழிலுக்கும் இவர்களே உண்மையான முன்னோடிகளாவர். அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட தாய், குழந்தை, மங்கை போன்ற பல்வேறு உருவங்களும் அணிகலன்களும் தொல்பழங்காலக் குயவர்களின் சிறந்த கலைத்திறனையும் தொழிலறிவையும் ஆழமாக வெளிப்படுத்துகின்றன.

**ஈமச்சின்னங்களில் பலவகை மட்பாண்டங்கள்**

மனிதன் இறந்த பின்பும் அவனுடன் கொண்டிருந்த வாழ்வியல் தொடர்பு முடிவடைந்துவிடுவதில்லை என்றும், அவன் ஆன்மாவாகத் தொடர்ந்து வாழ்வான் என்றும் பண்டையத் தமிழர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். இதன் காரணமாகவே அவர்கள் இறப்புச் சடங்குகளிலும் அவற்றை அடுத்து உருவாக்கப்படும் ஈமச்சின்னங்களிலும் அதிக கவனம் செலுத்தினர். அங்கு கண்டெடுக்கப்படும் பெருமளவிலான பேழைகள், தாழிகள் மற்றும் மட்பாண்டப் பொருள்கள் இவர்களின் ஈடுபாட்டை உறுதிப்படுத்துகின்றன. பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ள பழங்கால ஈமச்சின்னங்களின் அகழ்வாய்வுகளில் தாழிகளுடன் நூற்றுக்கணக்கான மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. இறந்தோரை அடக்கம் செய்யும் வழிபாட்டின்போது பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள் அனைத்தும் எஞ்சியவற்றோடு சேர்த்து அப்படியே புதைக்கப்பட்டுள்ளன(தங்கமணி.ம.தொல்லியல்,பக்-81). மனித உடல் அழிந்துவிட்டாலும், ஈமச்சின்னங்களில் உள்ள மட்பாண்டங்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள்

கடந்தும் அழியாமல் நிலைத்து நின்று பழங்காலக் குயவர்களின் கலை நுட்பத்தையும் தொழில் திறமையையும் உலகிற்கு எடுத்துரைக்கின்றன.

**சங்க இலக்கியங்களில் பானை வனைவோர்**

பெருங்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த சங்க காலத்தில், குயவர்கள் தங்களது தொழில் திறனில் முழுமையான முன்னேற்றத்தை எட்டி சமூகத்தில் மதிப்புமிக்கவர்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் சங்கப் பாடல்களில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன; குறிப்பாக, தமிழக வரலாற்றை உலகிற்கு எடுத்துரைக்கும் புறநானூற்றின் பல பாடல்கள் குயவர்களின் தொழில் சிறப்பைப் பற்றிய குறிப்புகளைத் தாங்கி நிற்கின்றன.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தபோது அவனது உடலை வைத்து அடக்கம் செய்வதற்காகத் தாயினைச் செய்கின்ற குயவனிடம் ஐயூர் முடவனார் என்னும் புலவர்,

**‘கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்**
**வேருலக மெய்தின னாதலின்**
**அன்னோற் கவிக்குங் கண்ணகன் தாழி**
**வனைதல் வேட்டனை யாயி னெனைய தூஉம்**
**இருநிலந் திகிரியாப் பெருமலை**
**மண்ணா வனைதலொல்லுமோ நினக்கே (புறநானூறு 228: 10-15)**

என்று கூறிப் பாடியுள்ளார். கலஞ்செய் கோவே! கலங்செய் கோவே! என்று குயவனைக் கோமகன் என்று விளித்த ஐயூர் முடவனார், 'யானைப் படைகளைக் கொண்டு கொடிகள் அசைந்தாடும் வலிமைமிக்கவனான கிள்ளிவளவன் மறைந்து தேவருலகம் எய்திவிட்டான். அவனது உடலை வைத்து அடக்கம் செய்வதற்கு ஏற்ற பிரம்மாண்டமான தாழியை உன்னால் எப்படி உருவாக்க முடியும்? இந்தப் பரந்த பூமி முழுவதையும் உன் குயவர் சக்கரமாகவும், இமயமலையை அதற்கான களிமண்ணாகவும் மாற்றினால் மட்டுமே உன்னால் அவ்வளவு பெரிய தாழியை வனைய இயலும்' என்று கூறுமிடத்து, விரும்பிய வகையில் மட்பாண்டங்களைக் குயவர்கள் செய்து தந்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

போர்க்களத்தில் உயிர் துறந்த தன் கணவன் மீது கொண்ட ஆழ்ந்த அன்பின் காரணமாக, அவனுடன் தானும் உயிர்துறந்து இருவரும் இணைந்தே ஒரே தாழியில் அடக்கம் செய்யப்படுவதற்காகப் பெரிய அளவுள்ள முதுமக்கள் தாழியினைச் செய்து தருமாறு ஒரு மனைவியானவள் குயவனிடம் உருக்கமாக வேண்டுகிறாள்.

**‘கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே**
**அச்சுடைச் சாகோட் டாரம் பொருந்திய**
**சிறுவெண் பல்லி போலத் தன்னொடு**
**சுரம்பல வந்த வெமக்க மருளி**

Dr. K. Anthony Raja. *Kalanjiyam International Journal of Tamil Studies* 2026, Vol. 6 No. 02, August 2026,
**DOI:** **https://doi.org/10.63300/kijts06022026.21**

**வியன்பல ரகன் பொழி லீமத் தாழி**

**அகலி தாக வனைமோ**

**நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே'** (புறநானூறு - 256)

என்று வேண்டுகிறாள். அக்காலத்தில் மட்பாண்டங்கள் செய்து தருகின்ற குயவர்கள் 'வேட்கோ' என்றும் அழைக்கப்பட்டனர் என்பதை,

**'வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த'** (புறநானூறு - 32:8)

என்ற புறநானூற்றுப் பாடல் அடியின் மூலமாக அறியலாம்.

**மட்பாண்டங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் சக்கரத்தின் சுழற்சி முறையையும் அதன் நுட்பத்தையும் சங்க இலக்கியமான மலைபடுகடாம் மிகத் துல்லியமாக விளக்குகிறது.**

**'வனைகலம் திகிரியின் குமிழி சுழலும்**

**துணை செலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்' ( மலைபடுகடாம்** 474-475)

**குயவர்கள் மட்பாண்டங்களை வனைவதற்காகப் பயன்படுத்தும் சக்கரத்தை இப்பாடல் 'திகிரி' என்று குறிப்பிடுகிறது. சக்கரம் வேகமாகச் சுழல்வது போல, ஆற்றில் ஏற்படும் நீர்க்குமிழிகளும் நீர்ச்சுழல்களும் வேகமாகச் சுழன்று செல்வதை இந்த வரிகள் உவமையாகக் கூறுகின்றன. இதன் மூலம் பழந்தமிழர்களின் மட்பாண்டத் தொழில் நுட்பமும், சக்கரத்தின் இயக்கமும் சங்க காலத்தில் எத்தகைய உயர்நிலையில் இருந்தன என்பதை அறிய முடிகிறது.**

கலை நுட்பத்துடன் கூடிய மட்பாண்டங்களைக் குயவர்கள் செய்து தந்துள்ளனர் என்பதை,

**'தாழின் குவளை வாடு மலர் சூட்டி'** (அகநானூறு -165 -11)

**'தாழியும் மலர்பல அணியா'** ( அகநானூறு -369 - 6)

இவ்வடிகளில், தலைவனுடன் தலைவி உடன்போக்குச் சென்றுவிட்டதால் வேலைப்பாடமைந்த பூந்தொட்டியில் தலைவி வளர்த்த பூச்செடி வாடிவிட்டது என்று கூறுமிடத்து, பூக்கள் வளர்ப்பதற்காக குயவர்கள் மட்பாண்டங்களை நேர்த்தியாகச் செய்துகொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. பண்டைத் தமிழ்க் குயவர்களால் பல்வேறு நிறங்களை உடைய மட்பாண்டங்கள் உருவாக்கப்பட்டன என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் மிகத் தெளிவாக விளக்குகின்றன.

**'செந்தாழிக் குவிபுறத் திருந்த'** (புறநானூறு - 238:1)

என்று, சிவந்த நிறமுடைய முதுமக்கள் தாழிகள் அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்ததைப் பதிவுசெய்துள்ளது. மேலும்,

**'பெருங்கட் குறுமுயல் கருங்கலன்'** (புறநானூறு- 322:5)

என்று, கருப்பு நிற மட்பாண்டங்களையும் பாத்திரங்களையும் பழந்தமிழர்கள் தயாரித்துப் பயன்படுத்தியமையைப் பதிவுசெய்துள்ளது. இத்தகைய சான்றுகள் மூலம், குயவர்கள் வெவ்வேறு

முறைகளில் சுட்டு மட்பாண்டங்களுக்குச் செம்பழுப்பு மற்றும் கருப்பு போன்ற பல்வேறு வண்ணங்களை அளிக்கும் தொழில்நுட்பத்தை அறிந்திருந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

சங்க காலத்தில் உணவு சமைக்கவும் பல்வேறு அன்றாடத் தேவைகளுக்காகவும் பலதரப்பட்ட பயன்பாடுகளுக்காகவும் குயவர்கள் மட்பாண்டங்களைத் தயாரித்து வழங்கியுள்ளனர். மக்களின் அத்தகைய அன்றாட வாழ்வியல் தேவைகளைச் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன**.**

**'முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி' (பெரும்பாணாற்றுப்படை :168-169)**

இப்பாடலடி அகன்ற வாயைக் கொண்ட மட்பாண்டத்தில் (குழிசி) உணவைச் சமைப்பதற்காக அதனை அடுப்பில் ஏற்றிய காட்சியை விளக்குகின்றன. இதன் மூலம் சமையல் பணிகளுக்காகத் தனிப்பட்ட வடிவத்திலான பானைகளைக் குயவர்கள் செய்து தந்துள்ளனர் என்பது புலனாகிறது. மேலும்,

**'மான்றடி குழுக்கிய புலவு நாறு குழிசி' (புறநானூறு: 168-9)**

இப்பாடலடி மான் கறி போன்ற இறைச்சி உணவுகள் சமைக்கப்பட்டு, அந்தப் புலால் நாற்றம் வீசும் மட்பாண்டங்களை மக்கள் பயன்படுத்தி வந்தமையைக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு மக்களின் அன்றாட உணவு முறைக்கும் பிற தேவைகளுக்கும் ஏற்ப பல்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் பலவகையான மட்பாண்டங்களைத் தயாரித்துக் கொடுத்துச் சமூகத்தின் வளர்ச்சிக்குக் குயவர்கள் பெருந்துணை புரிந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் மூலமாக அறியமுடிகிறது.

**அயலார் தொழில்நுட்பத்தை ஏற்கும் மாண்பு**

பழங்காலத் தமிழ்நாட்டுக் குயவர்கள் மேம்பட்டத் தொழில் திறமையையும் தனித்துவமான கலைத்திறனையும் பெற்றிருந்தாலும், பிற நாட்டவரின் புதிய தொழில் அறிவையும் நவீனத் தொழில்நுட்பங்களையும் மதித்துக் கற்கும் பரந்த மனப்பான்மை கொண்டிருந்தனர். கி.பி. முதல் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற்கும் உரோமானியப் பேரரசுக்கும் இடையே வணிகத் தொடர்பு மிகவும் சிறப்புற்று விளங்கியது. இக்காலக்கட்டத்தில் உரோம் நாட்டைச் சேர்ந்த கலையழகு மிக்க மட்பாண்டங்கள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றுள் 'ரௌலட்டட்' என்று அழைக்கப்படும் மட்பாண்டங்கள் நேர்த்தியான களிமண்ணைப் பல முறைகளில் பதம் செய்து உருவாக்கப்பட்டவையாகும். இவ்வகை மட்பாண்டங்களின் நேர்த்தியும் அழகும் அனைவராலும் விரும்பப்பட்டதால், தமிழகக் குயவர்கள் அவற்றைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தாமாகவே கற்றுக்கொண்டனர். பின்னர், உரோமானியர்களின் அதே கலை நுட்பத்துடன் தமிழகத்திலேயேயும் அவற்றைச் செய்யத் தொடங்கினர்.

**தொகுப்புரை**

அகழாய்வுகள் மற்றும் மேற்பரப்பு ஆய்வுகள் வாயிலாகத் தொல்பழங்காலத் தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் வாழ்வியல் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்வதே தொல்லியல்

துறையின் முக்கியப் பணியாகும். இத்துறையின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான தொல்பொருள் ஆதாரங்களாக விளங்குபவை பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் அழியாத தன்மை கொண்ட மட்பாண்டங்களே ஆகும். பண்டைய தமிழர்களின் வாழ்வியல் சிறப்புகள் பலவும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட இத்தகைய மட்பாண்டங்கள் மூலமாகவே வெளிக்கொணரப்பட்டுள்ளன. புதிய கற்காலத்திலேயே தமிழகக் குயவர்கள் பானை வனையும் தொழிலைத் திறம்படக் கையாண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து பெருங்கற்காலத்தில் மட்பாண்டங்களின் பயன்பாடு பெருமளவில் அதிகரித்ததால், குயவர்களின் தொழிலும் அபரிமிதமான வளர்ச்சியை எட்டியள்ளது. புதிய தொழில்நுட்பங்கள், கலை அறிவு, அழகியல் உணர்வு மற்றும் கணித அறிவு ஆகியவற்றைக் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர். மட்பாண்டங்களின் மீது அவர்கள் பொறித்த தமிழ் பிராமி எழுத்துக்கள், தமிழ் மொழியின் தொன்மையையும் அக்காலக் குயவர்களின் மொழியறிவையும் எடுத்துரைக்கின்றன.

**துணை நூல் பட்டியல்**


[1]. இராமன் கே.வி, தொல்லியல் ஆய்வுகள், பாவை பதிப்பகம் - 2014

[2]. இராசவேலு.சு, தொல்லியல் சுடர்கள், சேகர் பதிப்பகம் - 1994

[3]. கணபதி இளங்கோ, பண்டையத் தமிழர் வாழ்வியல்,பாவை பதிப்பகம்- 2012

[4]. காந்தி.க , தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - 2008

[5]. கைலாசபதி.க, பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு - 1978

[6]. சிற்றம்பலம். சி.க, பண்டையத் தமிழர், குமரிப் பதிப்பகம் - 1991

[7]. சீனிவாச ஐயங்கார் பி.டி, தமிழாக்கம் போரா.க. முத்துசாமி, இந்தியக் கற்காலம்,

a. அன்னம் பதிப்பகம் - 2004

[8]. சுந்தரமூர்த்தி. மா, பண்டையத் தடயங்கள், மணிவாசகர் பதிப்பகம் - 2005

[9]. சுப்பிரமணியன். தி, தமிழகத் தொல்லியலும் வரலாறும், செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் - 2009

[10].தங்கமணி ம. இரா, தொல்லியல், கொங்கு பதிப்பகம் – 2011

[11].தாமோதரன். கு. தொல்லியல் நோக்கில் தமிழகம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை -1999

[12].மாணிக்கம். வீ, தமிழர் வாழ்வியல், கிரியா பதிப்பகம் - 2010

[13]. ராஜன்.கா, தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - 2004

[14]. வேதாசலம். வெ, தொல்லியல் சுவடுகள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் - 2011